இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 14-08-2025

# தாயுமானவரின் கருணை உள்ளம்

தமிழ்நாடு முதலமைச்சர் தீட்டி வரும் திட்டங்கள், இதயத்தால் உருவாக்கப்படும் திட்டங்களாக அமைந்திருக்கின்றன.

மூத்த குடிமக்களின் வீடுகளுக்கு ரேஷன் பொருள்கள் நேரடியாக வழங்கும் சோதனை முறை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை அடுத்து இத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது. அரசு வழங்கும் சேவைகளை மக்களின் வீடுகளுக்கே தேடிச் சென்று கொடுப்பது இந்தியாவுக்கே முன்மாதிரி முயற்சி ஆகும்.

**தமிழ்நாட்டில் 34 ஆயிரத்து 814 நியாய விலைக் கடைகள் மூலம் 2 கோடியே 26 லட்சத்து 68 ஆயிரத்து 771 குடும்ப அட்டைதாரர்களுக்கு, பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ‘குடும்ப அட்டைதாரர்களுக்கு வீடு தேடிச் சென்று பொருள்களை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். இந்த அறிவிப்பை நடைமுறைக்குக் கொண்டுவரும் வகையில், அதற்கான சாத்தியக் கூறுகளை மாநில அரசு ஆய்வு செய்தது. அதன்படி, 70 வயதைத் தாண்டிய குடும்ப அட்டைதாரர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று பொருள்களை வழங்க முடிவு செய்யப்பட்டது. 10 மாவட்டங்களில் தலா 2 வட்டங்கள் தேர்வு செய்யப்பட்டன. இந்தப் பகுதிகளில் வசிக்கும் 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் வீடுகளுக்கு ரேஷன் பொருள்கள் நேரடியாக வழங்கப்பட்டன.**

மூத்த குடிமக்களில், 7.5 லட்சம் பேரின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று ரேஷன் பொருள்கள் வழங்கப்பட்டன. வீடு தேடி ரேஷன் திட்டம் சோதனை முறை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை அடுத்து தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

**வயது முதிர்ந்தோருக்கு மட்டுமல்லாமல், மாற்றுத் திறனாளிகளுக்கும் இதேபோல் பொருட்களை வீட்டுக்குச் சென்று வழங்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.**

**இத்திட்டமானது தமிழ்நாடு முழுவதும் 34 ஆயிரத்து 809 நியாய விலைக் கடைகளிலும் செயல்பாட்டுக்கு வந்துவிட்டது. 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களாக இருக்கும் 20 லட்சத்து 42 ஆயிரத்து 657 பேர் பயனடைய இருக்கிறார்கள். அதே போல் மாற்றுத் திறனாளிகளாக இருக்கும் 1 லட்சத்து 27 ஆயிரத்து 657 பேரும் பயனடைய இருக்கிறார்கள். மொத்தமாகச் சொல்வதாக இருந்தால் 21 லட்சத்து 70 ஆயிரத்து 454 பேர் பயனடைய இருக்கிறார்கள். இவர்களுக்கு இவர்களது வீடுகளுக்கே சென்று குடிமைப் பொருள்கள் வழங்கப்பட இருக்கின்றன.**

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இவர்களுக்கு பொருட்கள் வீடு வந்து சேரும். வீட்டு வாசலுக்கே கடை விற்பனையாளர்கள் வந்து கொடுப்பார்கள். இதன் மூலம் கூட்டுறவுத் துறைக்கு 30.16 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவு ஆகும். அரசின் பலனை அடைய எந்தச் சிரமமும் முதியோர், மாற்றுத் திறனாளிகள் அடைய வேண்டியது இல்லை.

மகளிர் உரிமைத் தொகைக்கு ஒரே ஒரு முறைதான் மகளிர் விண்ணப்பிக்கிறார்கள். அவ்வளவுதான். மாதம் தோறும் குறிப்பிட்ட நாளில் ஆயிரம் ரூபாய் அதுவாக வந்து மகளிரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. அதைப் போலத் தான், குடிமைப் பொருட்களும் மாதம் தோறும் அவர்களது வீடுகளுக்கு வந்து சேர்ந்து விடும். அலையவேண்டியது இல்லை. காத்திருக்க வேண்டியது இல்லை. பொருள் கிடைக்குமா கிடைக்காதா என ஏங்க வேண்டியது இல்லை. எவரையும் எதிர்பார்க்கத் தேவையில்லை.

**அரசுக்கும் மக்களுக்குமான தொடர்பை, இன்னும் கூடுதலாக நெருக்கமாக்கி இருக்கிறது இந்தத் திட்டம்.**

தமிழ்நாடு குறித்து பல பாராட்டுச் செய்திகள் வரிசையாக வந்து கொண்டு இருக்கிறது. அதில் மிகமிக முக்கியமானது தமிழ்நாட்டில் வறுமையின் விழுக்காடு மிகமிகக் குறைந்து விட்டது என்பது ஆகும். தமிழ்நாட்டில் பட்டினிச் சாவு இல்லை என்பது ஆகும். சமூக வளர்ச்சிக் குறியீடுகளில் இது மிகமிக முக்கியமானது ஆகும். தமிழ்நாட்டில் ரேசன் கடைகளின் எண்ணிக்கையை அதிகரித்தும், விலையில்லா அரிசி வழங்கியும் முன்மாதிரி முதலமைச்சராக நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தார்கள். அவரது வழித்தடத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 2 ஆயிரத்து 394 புதிய நியாயவிலைக் கடைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். 2,778 நியாய விலைக் கடைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இப்போது மொத்தம் 37 ஆயிரத்து 328 நியாய விலைக் கடைகள் இருக்கிறது. இவை பொதுமக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது.

திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு வேளாண் உற்பத்தி அதிகரித்துள்ளது. பாசனப் பரப்பு அதிகரித்துள்ளது. விளைச்சல் பொருட்களுக்கு உரிய விலை தரப்பட்டுள்ளது. விளைச்சல் பொருட்களின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

டெல்லியில் உள்ள தேசிய கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளைப் பதிவு செய்ததற்காகத் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு முதல் பரிசு வழங்கிப் பாராட்டியுள்ளது.

உற்பத்தி - விளைச்சல் - பாதுகாப்பு - வழங்கல் ஆகிய அனைத்தும் முறையாக நடப்பதால்தான் வறுமை இல்லாத, பட்டினிச் சாவு இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. 2022 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் வெளியிட்ட பட்டினிச் சாவு இல்லாத மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் இடம்பெற்று இருந்தது. விளிம்புநிலை மக்களை எப்போதும் நினைத்துக் கொண்டே இருந்தால்தான் இந்த வெற்றியை அடைய முடியும். அத்தகைய கருணை உள்ளம் முதலமைச்சருக்கு இருப்பதால் தான் தாயுமானவர் என்ற திட்டத்தை உருவாக்க முடிந்தது.

**“எனக்கு நடந்து போறதுக்கு கஷ்டமா இருந்தது. கடைக்குப் போய் அரிசி வாங்குறதுன்னா முடியாது. இப்ப எல்லாப் பொருளும் வீடு தேடி வருது. இப்ப எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு” - என்று பேட்டி அளிக்கிறார் ஒரு பெண்.**

**“எனக்கு கால் வலி. என்னால நடந்து போக முடியாது. அதுனால ரேசன் பொருளை முதலமைச்சர் அனுப்பி வைத்தது ரொம்ப பெரிய விஷயம். பெத்த பிள்ளைன்னா நீங்க தான் எனக்கு பெத்த பிள்ளைன்னு அவரிடமே சொன்னேன். கடவுள் மாதிரி வந்து காப்பாத்திட்டார். என்னைப் பார்க்க யாரு வருவா? முதலமைச்சர் தான் வந்தாரு. என்னை மாதிரி முடியாம கிடக்கிறவங்களுக்கு அவருதான் இருக்காரு” என்று கண்ணீர் மல்க பேட்டி அளித்துள்ளார் இன்னொரு பெண்.**

தாயுமானவராம் முதலமைச்சரின் கருணை உள்ளத்தை படம் பிடித்துக் காட்டுகின்றன இந்த வாக்குமூலங்கள்!



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (13.08.2025) காலை, அ.தி.மு.க. அமைப்புச் செயலாளர், முன்னாள் எம்.பி. வி.மைத்ரேயன் அ.தி.மு.க.விலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தார். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (13.08.2025) காலை, தமிழ்நாடு குரும்பா சங்கத்தைச் சேர்ந்த ஆர்.கே.ரவிக்குமார், தி.மு.க.வில் இணைந்தார். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

# துணைவேந்தர்கள் தேர்வுக்கான தேடுதல் குழுவை அமைக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை !

## உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு!

**புதுடெல்லி, ஆக.14-**

**கேரளாவில் 2 பல்கலைக்கழகங்களுக்கு இடைக்கால துணைவேந்தர்களை நியமனம் செய்த ஆளுநரின் முடிவு தன்னிச்சையானது எனக் கூறி உச்சநீதிமன்றத்தில் அம்மாநில அரசு வழக்கு தொடர்ந்தது. பல்கலைக்கழக விதிமுறைகள் மற்றும் உச்சநீதிமன்ற உத்தரவுக்கு எதிராக ஆளுநர் செயல்பட்டுள்ளதாகவும், எனவே, அவர் பிறப்பித்த துணைவேந்தர்கள் நியமன ஆணையை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.**

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, துணைவேந்தரை தேர்வு செய்வதற்கான தேர்வு குழுவை அமைக்கும் அதிகாரம் மாநில அரசுக்குதான் உள்ளது என்றும், ஆனால் ஆளுநர் அதற்கு முட்டுக்கட்டை போட்டு தனிக் குழுவை அமைப்பதாகவும் கேரளா அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, துணைவேந்தர்கள் தேர்வுக்கான தேடுதல் குழுவை அமைக்கும் அதிகாரம் யு.ஜி.சி விதிப்படி ஆளுநருக்கு இல்லை என்று நீதிபதிகள் தெரிவித்தனர். தேர்வுக் குழுவை அமைப்பதில் அரசுக்கும், ஆளுநருக்கு இடையே பிரச்சினை இருப்பதால் தேர்வுக் குழுவை உச்சநீதிமன்றமே அமைக்கும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். குழு உறுப்பினர்கள் குறித்த பெயர்களை வழங்குமாறு கேரளா அரசுக்கு உத்தரவிட்டனர்.

கேரளா அரசும், ஆளுநர் தரப்பும் நேற்று ஆலோசனை நடத்தி தலா 4 பெயர்கள் வீதம் 8 பெயர்களை இரு தரப்பும் வழங்க வேண்டும். அதன் பிறகு குழுவை உச்சநீதிமன்றம் முடிவு செய்யும் என்று நீதிபதிகள் அறிவித்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# வளர்ச்சி, வளர்ச்சி என அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சி!

## ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளேடு பாராட்டு!

*சென்னை, ஆக. 14 -*

*வளர்ச்சி, வளர்ச்சி என அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருவதாக ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளேடு பாராட்டு தெரிவித்துள்ளது.*




*தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்தது முதலே, அனைத்துத் துறைகளிலும் மாநிலம் தொடர்ந்து முன்னேறியும், வளர்ச்சி அடைந்தும் வருகிறது. தமிழ்நாட்டில் தொழில் தொடங்க பல்வேறு நிறுவனங்கள் ஆர்வத்துடன் வருகை தருகின்றன. ஏற்கனவே பல நிறு வனங்கள் முதலீடு செய்து தொழில்களை தொடங்கியுள்ளன. இதனால் தொழில் துறையில் மாநிலம் அசுர வளர்ச்சி அடைந்து வருகிறது. 2024- 2025ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு 11.2 சதவிகித பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இதற்கு அனைத்துத் தரப்பில் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள கட்டுரையில், வளர்ச்சி, வளர்ச்சி, வளர்ச்சி என அனைத்துத் துறைகளி லும் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருவதாக பாராட்டு தெரிவித்துள்ளது. 14 ஆண்டுகளில் இல்லாத பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 11.2 சதவிகித பொருளாதார வளர்ச்சியை பெற்று நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. உற்பத்தி, கட்டுமானம் என அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்கி வருவதாகவும், உற்பத்தித் துறையில் நாட்டுக்கே தலைநகராக திகழ்வதாகவும் ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளேடு புகழாரம் சூட்டியுள்ளது. 40 ஆயிரம் தொழிற்சாலைகள், 25 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் என தொழில்துறையில் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட்டு வருவதாகவும், மோட்டார் வாகனங்கள், ஆடைகள், தோல் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது. ஜவுளி, இயந்திரங்கள், உபகரணங்கள், கணினி மற்றும் மின்னணு, ஒளியியல் தயாரிப்புகளில் 2வது இடத்தில் உள்ளது. பொறியியல் பொருட்கள், மின்னணுவியல், ஆயத்த ஆடைகள், கைத்தறி பொருட்கள், தோல் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என்று ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது. பல்வேறு துறைகளில் சிறந்து செயல்படுவதால் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு பெற்றுள்ளதாக பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.*



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2025) சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் குடிமைப் பொருட்கள் வழங்கும் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று குடிமைப் பொருட்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வில் தேனாம்பேட்டை மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் லவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி. வே.கமலா செழியன், சென்னை தெற்கு பொதுவிநியோகத் திட்ட இணைப் பதிவாளர் திருமதி எஸ்.லட்சுமி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.